எனக்கு கிடையாது. இது ஒரு தனிப்பட்ட புவியில் சார் குறியீடு. இன்றைக்கு WHO சொல்லியிருக்கிறது. இன்றைக்கு கால சூழ்நிலையை எங்களால் கணிக்க முடியவில்லை. எப்பொழுது காலநிலை மாறும், பருவநிலை மாறும், பருவமழை பெய்யும் என்பதை கண்டுபிடிக்க முடியாமல் இன்றைக்கு விஞ்ஞானம் குழம்பிபோய் இருக்கிறது.

பூமிக்கு மிகப் பெரிய உறுதியாக இருப்பது பாறைதான். அந்த பாறையை எடுத்துவிட்டால் அந்த மண் நிற்காது. இதை யாருடைய உந்துதலின் பெயரிலோ, வற்புறுத்தலின் பெயரிலோ சொல்வதில்லை. இது எனது வாழ்வாதார பிரச்சனை. அந்த இடத்தில் ஒரு தென்னை மரமோ, தண்ணீரோ இருக்காது. நான் ஒரு ஆடு மேய்க்கிறேன் என்றால், அந்த ஆடு அந்த குழியில் போய் விழும். வீட்டில் ஒரு குழந்தை உள்ளது என்றால், அந்த குழந்தை தவறி போய் அந்த குழியில் விழுந்துவிடும். அதனால் உயிர் பாதிப்பு இருக்கிறது. இதை பார்க்கும்பொழுது மக்களின் கருத்துக்கேட்பு மாதிரி எனக்கு தெரியவில்லை. விவசாயம் செய்பவர்கள் இங்கே எவ்வளவு பேர் இங்கே இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியவில்லை. மேலும், உங்களிடம் மனு இருக்கிறது. எவ்வளவோ பேர் சூழ்நிலை காரணமாக இங்கே வரமுடியாமல் இருக்கிறார்கள். ஆகையால், இதற்கு அனுமதி தரக்கூடாது என்பதை தங்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**5. <u>திரு. S. முருகேசன், குப்பம்:</u>**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் முருகேசன், குப்பம். இந்த கல்குவாரி அமைப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**6. <u>திரு. சம்பத், கரூர்:</u>**

அனைவருக்கும் வணக்கம். தி/ள். மனோஜ் பிரபாகர் ப்ளூ மெட்டல் நிறுவனத்திற்கு அனுமதி கேட்டு கருத்துக்கேட்புக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மேலும், இந்த மனோஜ் பிரபாகர் ப்ளூ மெட்டல் பல ஆண்டு காலமாக சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும், புதியதாக தொடங்கக்கூடிய தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கியும், பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையிலும், மேலும் கட்டிடம் கட்டுவதற்கு கல், மண், ஜல்லி போன்றவை கிடைப்பதற்கும், அந்த பகுதியில் இருக்கும் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உதவும் வகையில் இருக்குமாறும், மேலும், அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பு வழங்கியும் இந்த தொழிற்சாலையை நடத்த அனுமதி வழங்கலாம் என்பதை எனது அகில இந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன் நன்றி என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

**இடையில் திரு. பெரியசாமி அவர்கள் பின்வருமாறு கூறினார்.**

கருத்துக் கணிப்பு என்பது அந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களை வைத்துக் கொண்டு நடத்தினால் அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சம்பந்தமே இல்லாமல் வேறு, வேறு பகுதிகளில் இருந்து வந்து தங்களது கருத்துகளை சொன்னால் அவற்றை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். இந்த கருத்துக் கணிப்பு கூட்டம் என்பது கண்துடைப்பு மாதிரி தெரிகிறது. இந்த கூட்டம் போடுவதே தேவையில்லாமல் நேரத்தை செலவிடுவதுபோல் உள்ளது. ஏன்னென்றால், அந்த பகுதியை சார்ந்த மக்கள் பேசாமல், வேறு எங்கோ இருந்து நபர்களை அழைத்து வந்து பேசவைக்கிறார்கள். இதை எப்படி

நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும். ஆகையால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

கருத்துக் கணிப்பு நீங்கள் நியாயமாக நடத்த வேண்டும். பக்கத்து பங்குதாரர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை வைத்து நீங்கள் கருத்துக் கணிப்பு நடத்தினால் அது நியாயமானதா சார்? சம்பந்தமே இல்லாத 10 கிலோமீட்டர், 20 கிலோமீட்டர் தள்ளி இருக்கிறவர்களை வைத்து கருத்துக் கணிப்பு நடத்துவது எதுக்கு சார்? என்று வினவினார்.

**பின்பு மாவட்ட வருவாய் அலுவலர் பின்வருமாறு கூறினார்.**

பொதுவாக செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து தான் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துகிறவர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள், பங்காளிகள் யாராக இருந்தாலும் வந்து அவர்களுடைய கருத்துகளை தாராளமாக சொல்லாம். யாரையும் தடுக்கவில்லை. உங்களோட கருத்துக்களை சொன்னால் அதை பதிவுசெய்து அனுப்புவோம். யார் வேண்டுமானாலும் கூறலாம். உங்களோட கருத்துக்களை நீங்கள் கூறுங்கள். இப்போது ஒரு ஓட்டு பதிவு எடுக்கிறார்கள் எத்தனை பேர் ஆதரவு கொடுக்கிறார்கள். ஆதரவு என்று எடுக்கும்போது சம்பந்தம் இல்லாத அந்த 100 பேரை கூட்டிட்டு வந்து அவர்கள் ஆதரவு சொல்லிவிட்டு போனால் பக்கத்தில் இருக்கக்கூடிய 10 பேர் பாதிக்கிறார்கள் என்றால் ஆதரவு அவர்களுக்குத் தான் செல்லும். இது ஓட்டெடுப்பு இல்லை, யாரும் ஓட்டெடுப்பு எடுக்கவில்லை.

"மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பி தான் அனுப்புவார்கள். இதில் ஒருத்தர் வேண்டாம் என்று சொன்னாலும் 100 பேர் வேண்டும் என்று சொல்லி 1 நபர் மட்டும் வேண்டாம் என்று சொன்னாலும் எல்லாவற்றையும் கலந்துதான் அனுப்புவார்கள். அதனால் உங்களோட கருத்து என்னவோ, அதை சொல்லுங்கள். அதை தெளிவாக சொல்லுங்கள். இதில் வந்து வேண்டும், வேண்டாம் என்றெல்லாம் கேட்கவே இல்லை. இந்த இந்த காரணத்துக்காக வேண்டும், இந்த இந்த காரணத்துக்காக வேண்டாம் சொன்னால்தான் தெரியும்" என்றார்.

7. **<u>திருமதி.லோகாம்பாள், வேலப்பகவுண்டனூர்:</u>**

சர்வே எண்.686 மனோஜ்குமார் கல்குவாரி ஆரம்பித்திருக்கிறார். அதே எண்ணில் என்னோட வீடு, காடு, தோட்டம், கிணறு எல்லாம் இருக்கிறது. அதனால் அனுமதி அளித்தால் என்னோட வாழ்வாதாரம் பாதிக்கும். நாங்கள் விவசாயத்தை விட்டால் எதுவும் இல்லை. கல்குவாரி ஆரம்பித்தால் அந்த இடத்தில் குடியிருக்க முடியுமா? உங்களுக்கே தெரியும். அந்த இடத்தில் குடியிருக்க முடியாது, விவசாயம் செய்ய முடியாது. ஆழ்துளை கிணறு பத்து அடிக்குள்ளேயே இருக்கின்றது. வெடிவைத்து துளைக்கும்பொழுது நாங்கள் சிதறி போய்விடும் நிலை உள்ளது. தண்ணீர் அதிகம் ஊற்றெடுக்காது இதற்கு மேல் நீங்கள் அனுமதி கொடுத்தால் நாங்கள் தற்கொலைதான் செய்துகொள்ளவேண்டும். வேறு வழியே இல்லை நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

8. **<u>திரு. A. S. கார்த்திக்கேயன், மேலப்பாளையம்.</u>**

மனோஜ்குமார் கல்குவாரி ஆரம்பிப்பது எனக்கும் எனது நண்பர்களுக்கும் வேலை கிடைக்கும் நன்றி என்று கூறினார்.

**9. <u>திரு. கதிர்வேல், க.பரமத்தி:</u>**

எனக்கும், லாரி டிரைவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலை கிடைக்கிறது. அதனால் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**10. <u>திரு. பழனிச்சாமி, ஆண்டிசங்கிலிப்பாளையம்.</u>**

இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அதிகாரிகளுக்கும், மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளுக்கும், காவல்துறைக்கும், செல்வவிநாயகா நிறுவனத்திற்கும், பெஸ்ட் ப்ளூ மெட்டல் நிறுவனத்திற்கும், அரசு சார்பில் வந்துள்ள அனைத்து அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கூட்டம் குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்காக பொதுமக்களின் கருத்துக் கேட்பதற்கு கூட்டப்பட்டுள்ளது. குவாரி தொழில் செய்பவர்கள், அரசிடம் அனுமதி கேட்டால் அரசு அதிகாரிகள் குவாரி இருக்கும் இடத்தை பார்வையிட்டு குவாரியின் வெளிமுனைப்பகுதியில் இருந்து மத்திய மாநில அரசின் சட்ட திட்டத்தின்படி 300 மீட்டருக்குள் பாதிப்பு ஏதும் இருக்கிறதா ? இல்லையா ? என்று ஆய்வு செய்து அனுமதி கொடுக்க வேண்டும். எந்த அதிகாரியும் ஆய்வு செய்வதில்லை. அப்படியும் ஆய்வு செய்தால் குவாரி நிறுவனத்திற்கு சாதகமாக 300 மீட்டருக்குள் எந்த பாதிப்பும் இல்லை என்று சான்று அளிக்கிறார்கள். ஏன் இந்த கருத்தை கூறுகிறேன் என்றால், கரூர் மாவட்டத்தில் 8 மணி நேரத்தில் 1000 யூனிட் அரைப்பவர்களுக்கு எனது தோட்டத்தின் அருகில்தான் தொழில் செய்கிறார்கள். இன்னும் கரூர் மாவட்டத்தில் முதல் 20 இடத்தில் 2, 3 பாறைகளும், சதுப்பு நிலங்களும் இருக்கிறது. இடைப்பொழிவில் செய்கிறார்கள். ஆனால் அரசு அதிகாரிகளோ, தொழில் செய்து வரும் கிரஷர் அதிபர்களோ என்னிடம் தொழில் செய்வதற்கு பாதிப்பு இல்லை என்று அனுமதி கடிதம் இன்றுவரை கேட்டது கிடையாது. குப்பம் கிராமத்தின் பஞ்சாயத்து சாலையில் எந்த சாலையில் சென்றாலும் மாலை 5 மணிக்கு மேல் சாலையை குறுக்கிட்டுத்தான் போடவேண்டும். சிக்னலில் வாகனம் நிற்காமல் சென்று விடுகிறது. ஆனால் எங்கள் குப்பம் கிராமத்தில் அமைச்சரே வந்தாலும் கூட 5, 10 நிமிடம் நின்று தான் செல்லவேண்டும்.

கிரஷர், குவாரிக்கு அனுமதி கொடுக்கும்பொழுது கிணறு, போர்வெல், வீடு, வாய்க்கால், கோவில், சுடுகாடு, தண்ணீர் தொட்டி, பள்ளிக்கூடம், பாலம், மக்கள் அதிகமாக வசிக்கும் இடம் என ஆய்வு செய்து பக்கத்தில் இருப்பவர்களிடம் கலந்து பொதுமக்களிடம் கருத்துக்கேட்புக் கூட்டம் மத்திய, மாநில அரசின் விதிகளுக்குட்பட்டு அனுமதி கொடுக்க வேண்டும். ஆனால் அரசு அதிகாரிகள், கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்தி பொதுமக்கள் குவாரிக்கு அருகில் உள்ளவர்கள் என்ன கருத்துக் கூறினாலும் கருத்துக்கேட்புக் கூட்டம் முடிந்து 6 மாதத்தில் அனுமதி கொடுத்து விடுகிறீர்கள். எங்களுக்கு பாதிப்பு உள்ளது என்று நிறுவனத்தின் மீது மனு கொடுத்தாலும் புகைப்படம் எடுத்து அரசு அதிகாரிக்கு அனுப்பினோலோ அரசு அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. உதாரணத்திற்கு NTC குவாரிக்கு அருகில் தண்ணீர் தொட்டி 30 அடி தூரத்தில் நூற்றுக்கணக்கான கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. NTC குவாரியினால் பைப் லைன் சேதம் அடைந்துவிடுகிறது. இதனால் தண்ணீர் வீணாகிறது. நொய்யல் ஆற்று நீர் அணை கட்டப்பட்டுள்ளது. 300, 400 மீட்டர் அருகில் A1 புளூமெட்டல், 200 அடிக்கு தூரத்தில் அரசு உயர்நிலைபள்ளி உள்ளது. A1 புளூமெட்டல் கடந்த 10 வருடங்களாக அரசு அனுமதி இல்லாமல் தொழில் செய்து வருகிறார்கள்.

அணையின் பாதுகாப்பு கருதி மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேன். இதே அரசு அதிகாரிகளுக்குத் தெரியும். தொடர்ந்து அரசு அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது அணையின் நீர்மட்டம் முழு கொள்ளவை எட்டி உள்ளது. இனிமேலாவது அணையின் பாதுகாப்பு கருதி கார்வழியில் உள்ள அரசு உயர்நிலை பள்ளியின் குழந்தைகளை பாதுகாக்கவும், அரசு அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க A1 புளூ மெட்டல்ஸ் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இனிமேல் A1 புளூ மெட்டல்ஸ் நடக்க கூடாது என்று கூறிக்கொள்கிறேன். மேலும் முத்தூரில் இயங்கிவரும் வெடிமருந்து நிறுவனம் கிரஷர் எக்ஸ்பிரஸ் வெடிமருந்து நிறுவனர் பெயர் திரு. பாலாஜி வெடி மருந்து கம்பெனி உயர்நிலைப்பள்ளிக்கு அருகிலும் உள்ளதால் பாதுகாப்பு கருதி அதன் உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால்மேட்டில் பல கனரக வாகனங்கள் ஓட்டுவதை தடை செய்ய வேண்டும் என ஆதங்கத்துடன் அரசு அதிகாரிகளுக்கு மனு அனுப்பி இருந்தேன். அதற்கு அவர் கனரக வாகனம் செல்லலாம் என பதில் மனு அனுப்பியிருந்தார். காங்கேயத்தை சேர்ந்த நீர் ஆதார அமைப்பு அரசு அதிகாரி வாய்க்கால் ரோடு அவருடைய சொந்த சொத்து இல்லை என இந்த கூட்டடத்தில் கூறிக்கொள்கிறேன். அரசின் பொதுசொத்தை சேதப்படுத்திய இடத்திற்கு அரசு அதிகாரி அனுமதி கொடுக்கும்பொழுது A1 புளூ மெட்டல், விநாயகா புளூ மெட்டல் இந்த இரண்டு நிறுவனத்திற்கும் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தாமலேயே அனுமதி கொடுக்கலாம் என கூறிக்கொள்கிறேன்.

முத்தூர் கிரஷர் வெடிமருந்து நிறுவனம் மூலனூர் குமிழி எங்கள் பகுதியில் அனுமதி இல்லாமல் இயங்கும் கல்குவாரிகளுக்கு அரசால் தடை செய்யப்பட்ட கல்வகைகளை விற்று வருகிறார்கள். அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து அவர்கள் உரிமத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். வெடிமருந்து பெரிய நான்கு சக்கர வாகனங்களில் அதிவேகமாக பஞ்சாயத்து சாலைகளில் ஓட்டி செல்வதால் விபத்து நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கரூர் மாவட்டத்தில் 30 கிராமம் வரைபடத்தில் காணமல் போய் உள்ளது. எனவே சட்டத்திற்கு உட்படாமல் நடத்தும் நிறுவனத்தின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறிக்கொள்கிறேன். கிரஷர் குவாரி தொழில் செய்வர்களால்தான் பாதிப்பு, விவசாயம் செய்வதாலேயோ, தனிநபர் தொழில் செய்வதினாலேயோ பாதிப்பு கிடையாது என கூறிக்கொள்கிறேன். இதனால் தொழிலுக்கு நான் எதிரானவன் அல்ல குவாரி தொழில் செய்பவர் அதிகாரமான பேச்சால்தான் இங்கு மைக் பிடித்து பேச வேண்டியதாய் உள்ளது. ஒரு கிரஷர் நிறுவனத்தில் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டுள்ளேன். வழக்கறிஞர் மின்வாரியத்தின் ரசீது வேண்டும் என்று கேட்டார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இரசீது கேட்டிருந்தேன் அந்த நிறுவனத்திற்கு ஒரு வருடத்திற்கு கட்டிய பணம் 3, 4 கோடியாகும். அப்படியானால் எங்களுக்கு விவசாயிகளுக்கு எந்த அளவு பாதிப்பு இருக்கிறது என்று அரசு அதிகாரிகள் நினைத்து பார்க்க வேண்டும். எனவே பெஸ்ட் புளூமெட்டல் மற்றும் விநாயகா புளூமெட்டல்ஸ் சட்ட திட்ட விதிகளின்படி அனுமதி கொடுக்கலாம் எந்த ஆட்சேபனையும் எனக்கு இல்லை எனக் கூறி உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு.K.சிவசாமி, குப்பம்:**

கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிரஷர் வேண்டும், வேண்டாம் என்று கூறாமல் பாதிக்கப்படுபவர்கள் பதிலளிக்க வேண்டும். யாரையும் வம்புக்கு இழுக்கக்கூடாது. கிட்டத்தட்ட 35 குவாரி குப்பத்தில் உள்ளது. 8 மணிநேரம் வேலை நேரமாக மாற்றிவிட்டார்கள். ஏகப்பட்ட தொழிலாளர்கள் 500, 600 நபர்களுடைய வாழ்வாதாரமாகவே உள்ளது. நான் 25 வருடங்களாக கிரஷரில் பணிபுரிந்து வருகிறேன். நான் கிரஷருக்கு போகாமல் இருந்தால் குடும்ப சூழ்நிலை மாறி இருக்கும். விவசாயிகளுக்கும் பாதிப்பு இருக்கக்கூடாது, தொழிலாளர்களுக்கும் பாதிப்பு இருக்கக்கூடாது. தொழில் இல்லை என்றால் எதுவும் செய்ய முடியாது அதனால் இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தை நல்லபடியாக முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. பாண்டியன், கரூர்:**

கிரஷரினால் வேலைவாய்ப்பு அதிகம் என்கிறார்கள்.குவாரி வருவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றார்.

**13. திரு. ஈஸ்வரமூர்த்தி, காளிபாளையம்:**

8 மாதங்களுக்கு முன்பு 45 நாட்கள் ப்ளூ மெட்டல் டிரைவராக பணிபுரிந்தேன். வேலை இல்லை என்றார்கள். விவசாயப் பூமிக்கு அருகிலேயே கல் உடைக்கின்றார்கள். மதுரைக்கு அப்பால் இருந்து வரும் மக்கள், வடமாநிலத்தவர்கள் ஆகியோர்களுக்கு வேலை உண்டு என்கிறார்கள். எங்களுக்கு (1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளோம்) வேலை கிடையாது என்கிறார்கள். விவசாய பூமியில் இறங்கி பணிபுரிந்தோம். அருகிலேயே பாறையை உடைக்கிறார்கள். விவசாயப் பூமியில் பாறைகளை உடைத்துப் போட்டார்கள் விவசாய பூமியை களவாடுவதற்காகவா ? எதற்கு ? பதில் கூறுங்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் குறுக்கிட்டு தாங்கள் கூறுவது புரியவில்லை தெளிவாக புரியுமாறு பேசுங்கள் என்று கூறினார்.

இங்கு வருபவர்களெல்லாம் மைக்கை பிடித்து ஆட்சேபனை இல்லை என்கிறார்கள் என்று கூறினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் குறுக்கிட்டு குவாரியைப் பற்றிய கருத்துக்களைப் பதிவிடுமாறு கூறினார். சென்னை அலுவலகத்தில் CD போட்டுப் பார்க்கும் பொழுது தெளிவாக தெரிய வேண்டும் என்று கூறினார்.

குவாரி உரிமையாளர்கள் அநாகரிகமாக நடந்துக் கொள்கின்றனர் எனக்கு வேலை வழங்குமாறு கெஞ்சிப் பார்த்தேன் வேலை கொடுக்கவில்லை. வீட்டிற்கு அருகிலேயே குவாரி உள்ளது. எனக்கு வேலை தர மறுக்கிறார்கள். மேலும் விவசாயப் பூமிக்கு அருகில் இந்த குவாரி வேண்டாம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**14. திரு. க. பெரியசாமி, காளிபாளையம்:**

ப்ளூ மெட்டல் அருகில் எங்களின் விவசாய நிலங்கள் வீடு அனைத்தும் உள்ளது. அதனால்தான் கண்டிப்பாக அனுமதி வழங்கக்கூடாது. கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்துவதற்கு விவசாயிகளாகிய எங்களிடம் நோட்டீஸ் கொடுத்தீர்களா ? என்று கேட்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மு.கூ.பொ) அவர்கள், 09.08.2024 வெள்ளிக்கிழமை அன்று விளம்பரப்படுத்தி, நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்று கூறினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் குறுக்கிட்டு செய்தித்தாளிலும் விளம்பரப்படுத்தியுள்ளோம் என்று கூறினார்.

இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**15. <u>திரு. ந. சண்முகம், சட்ட விரோத கல் குவாரி எதிர்ப்பு இயக்கம், கரூர் :</u>**

கரூர் மாவட்ட அலுவலகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்தும் மனோஜ் பிரபாகர் கல்குவாரிக்கான கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து ஒவ்வொரு கல்குவாரியின் கருத்துக்கேட்புக் கூட்டத்திலும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். சிறுகனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36—ன்படி ஒரு குவாரி அமைய வேண்டுமானால் 45 வகையான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். அதனை பொதுமக்களுக்கு கொடுத்து அதன்பிறகுதான் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்று தொடர்ந்து கூறிக்கொண்டு இருக்கிறோம். 15 வகையான ஆவணங்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளது மற்ற ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. ஆகவே இந்த கல்குவாரிக்கான கருத்துக்கேட்புக் கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது எங்களது குறிக்கோளாகும். இருந்தாலும் கூட்டத்தைக் கூட்டி கருத்தைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். நாங்கள் எங்கள் கருத்துக்களை கூற வந்துள்ளோம்.

தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி கல்குவாரி அமையுமானால் அந்தப் பகுதியில் என்னென்ன சுற்றுச்சூழல் தாக்கங்கள் அதாவது நிலச்சூழல், நீர் சூழல், காற்றுச்சூழல், பல்லுயிர் சூழல், பொருளாதார சூழல் எவ்வாறு பாதிக்கப்படும் எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும் என்று கருத்துக்களை மக்களிடம் கேட்டு அதை SEIAA என்கின்ற தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது. நாங்கள் பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளையும், விதிமீறல்களையும் கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கல்குவாரியிலும் உள்ள விதிமீறல்களைக் கூறி விதி மீறிய கல்குவாரிகள் மீது அனுமதி கொடுக்கக்கூடாது என்று கோரிக்கை வைத்துள்ளோம். மனோஜ்குமார் கல்குவாரியின் 683/1, 686/1 பகுதி என்று குறிப்பிடுகிறார்கள் நாங்கள் சென்ற கூட்டத்திலேயே கூறினோம். தயவுசெய்து பகுதி என்று குறிப்பிட வேண்டாம். NTC கல்குவாரியில் பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஜல்ஜீவன் திட்டத்தால் கட்டப்பட்ட 80 கோடி ரூபாய் மதிப்பிலான நீர் தொட்டிக்கும் பக்கத்திலேயே கல்குவாரி நடத்திக் கொண்டுள்ளார்கள். அந்தப் பகுதியில் வெடி வைத்து 8—க்கும் அதிகமான இடங்களில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வெளியாகி கொண்டிருக்கிறது. PWD அதிகாரிகள் கடிதமாகவே கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பகுதியிலும் பகுதி என்பதை இனிவரும் காலங்களில் உட்பிரிவு செய்து அதனடிப்படையில் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இந்தக் குவாரியின் தென்புறத்தில் குவாரியைச் சுற்றி வீடுகளோ, வீட்டுமனைகளோ, நீர்நிலைகளோ, வாய்கால்களோ, வண்டிப்பாதைகளோ, உயர்மின்

கோபுரங்களோ இருக்கக்கூடாது. இந்தக் குவாரி அமையவுள்ள இடத்தில் இருந்து இயங்கி முடிக்கப்பட்ட இயங்கிக் கொண்டிருக்கும் குவாரிகள் இருக்கின்றன. 300 அடி, 400 அடி ஆழத்திற்கு குழியாக இருக்கும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கிருஷ்ணமூர்த்தி குவாரி, தமிழ்செல்வி குவாரி 300, 400 மீட்டர் ஆழத்திற்கு வெட்டி எடுத்து மண்ணைப் போட்டு மூடிக் கொண்டிருக்கிறார்கள்.

சிறுகனிம சலுகை விதிகளின்படி இந்தக் குவாரி இயங்காமல் மூடப்படும்போது அதைக் கம்பி வேலி போட்டு மூடி வைக்க வேண்டும் என்று விதி உள்ளது. வெங்கட்ரமணசுவாமி என்னும் குவாரி 4 ஏக்கர் பரப்பளவில் மண்ணைப்போட்டு மூடி கனிமக்கொள்ளை வெளியே தெரியக்கூடாது என்று மூடிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் மனோஜ்குமார் கல்குவாரியானது குவாரியின் தென்புறத்தில் 686/2 பகுதியில் ஒரு வீடு உள்ளது. அந்த வீடு லோகாம்பாள் என்பவருக்குச் சொந்தமான வீடு குவாரியினுடைய பின்புறத்தில் 300 மீட்டருக்குள்ளேயே வீடு இருப்பதால், இந்தக்குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது. இது விதிமீறல். ஒரு வீடு இருந்தாலே அனுமதி கொடுக்கக்கூடாது என்று சிறுகனிம சலுகைவிதி கூறுகிறது. குவாரியின் கிழக்குப் புறத்தில் 687–ல் அங்கீகரிக்கப்பட்ட வீடு, FMP Map–ல் தெளிவாக காட்டியுள்ளார்கள். குவாரியின் தென்கிழக்கில் சர்வே எண். 690–ல் 3 வீடுகள் குணசேகரன், செல்லம்மாள், தங்கம்மாள் அவர்களுக்குச் சொந்தமான 3 வீடுகள் உள்ளது. குவாரியின் வடக்கே சர்வே எண். 52–ல் ஒரு வீடு உள்ளது. அதுமட்டுமில்லாமல் Google Map–ல் தென்கிழக்கில் 151 மீட்டரில் வீடு, வடமேற்கில் 232–ல் ஒரு வீடு இருப்பதாகவும், வடகிழக்கில் 156 மீட்டரில் வீடு இருப்பதாகவும், வடமேற்கில் 286 மீட்டரில் வீடு இருப்பதாகவும், வடமேற்கில் 220 மீட்டரில் ஒரு வீடு இருப்பதாகவும், வடக்கில் 51 மீட்டரில் வீடு இருப்பதாகவும் இப்படி பல்வேறு வீடுகள் உள்ளன. எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுப்பது சட்டப்படி தவறானது அனுமதி கொடுக்க முடியாது. அதேபோல் இந்தக் குவாரி அமைவிடத்தில் இருந்து 300 மீட்டர் தெற்குப் புறத்தில் பார்த்தால் பவர்லைன் சென்றால் அனுமதி கொடுக்கக்கூடாது என்று சிறுகனிம விதி கூறுகிறது. இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுப்பது சட்டப்படி தவறானதாகும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 10 கி.மீட்டர் சுற்றளவில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 10 கிலோ மீட்டர் சுற்றளவில் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலை இல்லை என்கிறார்கள்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை மற்றும் இங்குள்ள குவாரிகள் அனைத்தும் மாசு ஏற்படுத்திக் கொண்டுதான் உள்ளார்கள். காணொளி விளக்கப்படத்தில் (Power Point Presentation) தவறான தகவல்களை பதிவிடுகிறார்கள். இனிவரும் காலங்களில் அருகிலுள்ள அனைத்துக் குவாரிகளையும் இணைத்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதான் எந்தெந்த தொழிற்சாலைகளால் தீங்கு ஏற்படுகிறது என்பதை உணரமுடியும். அதுமட்டுமில்லாமல் கிராம வரைபடம் இணைக்கப்படவில்லை. கிராம வரைபட இணையத்தில் மட்டும்தான் எங்கு வீடு உள்ளது, எங்கெங்கு குவாரிகள், நீர்நிலைகள், கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் போன்றவைகள் உள்ளன என்பதை கண்டுபிடிக்க முடியும். கண்டிபிடிக்கக்கூடாது என்பதற்காகவே வரைபடத்தில் தமிழ்நாடு சிறுகனிம விதிகளின்படி 45 ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டிய இடத்தில் 15 வகையான ஆவணங்களை மட்டும் இணைத்துவிட்டு இந்தக் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல் சுற்றுச்சூழலுக்கு மரம் வைக்கிறேன் என்று கூறுகிறார்கள். இந்த மரம் நாட்டு மரம் தான் வைக்க

வேண்டும், நாட்டு மரங்கள் வைத்தால் மட்டுமே சுற்றுச்சூழலை கட்டுப்படுத்தும். இவர்கள் ஆங்கில மரங்களை வைத்துள்ளார்கள் அதனால் இந்தக் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

இந்தக் குவாரிக்கும் பக்கத்திலேயே அன்னை புளூமெட்டல் குவாரி, கிருஷ்ணமூர்த்தி, தமிழ்செல்வி குவாரி, மேற்குப் பகுதியில் குவாரியின் பெயர் இல்லை அதை இணைக்கவில்லை. இந்தக் குவாரியில் மிகப்பெரிய அளவில் குழிகள் உள்ளது எட்டிப் பார்த்தால் பயந்து விடுவோம். தமிழ்நாட்டில் பருவநிலை மாற்றம் நடந்துக் கொண்டிருக்கிறது. காற்று அடிக்கும் காலத்தில் 110 டிகிரி வெயில் கொளுத்துகிறது. மழை குறைவாக உள்ளது. கல்குவாரி இந்தப் பகுதியில் சுற்றுச்சூழலை அழித்தால் நாம் அழிந்துவிடுவோம் என்பதற்கு எடுத்துக்காட்டு வயநாடு. சுற்றுச்சூழல் அழிவினால் தான் 1200–க்கும் அதிகமான வீடுகள் இடிந்துவிட்டன. அதேபோல் இந்தக் குப்பம் கிராம பகுதியில் நடக்காமல் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

16. <u>திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், கரூர்:</u>

கரூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்துகின்ற குப்பம் கிராமத்தில் மனோஜ் பிராபாகர் கல்குவாரிக்கு கருத்துக் கேட்பு கூட்டத்தினுடைய தலைவர், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாவட்ட வருவாய் வலுவலர் அவர்களுக்கும். இதற்கு முன்னிலை வகித்து நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாசு கட்டுப்பாடு அதிகாரி அவர்களுக்கும், இங்கே கலந்து கொண்டுள்ள பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், காவல்துறையினருக்கும் பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் கல்குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும், கல்குவாரி உரிமையாளருக்கும் அனைவருக்கும் நாங்கள் சார்ந்து இருக்கக்கூடிய தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் பேசுவதற்கு முன்பு இந்த குவாரி அமைவதற்கு புலத்தை ஒட்டி இந்த குவாரி 683, 686 இந்த குவாரிக்கு அருகில் உள்ள புலம் 682 –ல் அன்னை புளு மெட்டல் என்ற செல்வகுமார் குவாரி. அந்த கல்குவாரி தொடர்ந்து சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டதால் 2022 செப்டம்பர் மாதம் ஆவணங்களை அதிகாரிகளிடம் கொடுத்து, மாசு கட்டுப்பாடு அதிகாரிகள் இந்த குவாரியை மூடியதற்காக, குவாரி மூடப்பட்ட மூன்றே நாட்களில் கல்குவாரி உரிமையாளர்களால் படுகொலை செய்யப்பட்ட விவசாயி ஜெகநாதனுக்கு வீர வணக்கத்தை செலுத்திக்கொண்டு எனது உரையைத் தொடங்குகிறேன்.

அதே நேரத்தில் சட்ட விரோதமாக தொடர்ந்து கல்குவாரிகள் இயங்கியதாலும், சட்டவிதோமாக தொடர்ந்து கட்டுமானங்கள் கட்டப்பட்டதாலும், சாலைகள் போடப்பட்டதாலும் மற்றும் பல்வேறு விதிமுறைகள் மூடப்பட்டதென்று கரடியாக கத்தினார் பேராசிரியர் அவர்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றிய அரசு ஆய்வு செய்யும் குழுவை அவர் தலைமையில் அமைத்து அவர் அந்த குழு அறிக்கையை அரசுக்கு கொடுத்தார். வயநாட்டில் இருக்கக் கூடிய 3 வட்டங்கள் எந்த நேரமும் அழியும் என்ற அறிக்கையைக் கொடுத்தார். ஆனால், அரசு அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இங்கு நடப்பது போலத்தான் வளர்ச்சி, வேலை என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு மொத்த வயநாடும் அழிந்து போய் என்ன செய்வதென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலையைக் கொண்டு இங்கு அமையக் கூடிய மனோஜ் பிரபாகர் கல்குவாரி முதலில் சட்ட அடிப்படையில், விதியின்

அடிப்படையில் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். எனக்கு முன்னால் திட்ட வடிவமைப்பாளர் அவர்கள் இந்த குவாரி சட்ட அடிப்படையில் இருக்கிறது. இந்த குவாரியினுடைய காற்று, மண், நீர், ஒலி, பல்லுயிர்ச்சூழல், சுற்றுச்சூழல் ஆகியவற்றை நாங்கள் 3 மாதம் ஆய்வு செய்தோம். இந்த குவாரியினால் பிரச்சனை வரும். இந்த பிரச்சனையை எல்லாம் சரி செய்ய வேண்டும் என்றார்கள். எனக்கு முன்னால் பேசிய இந்த ஊர் பொதுமக்கள் என்னென்ன பிரச்சனை இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், கல்குவாரி தொடங்குபவர்கள் யாருமே இந்த ஊரில் இந்த பிரச்சனை இருந்தது. இந்த குவாரி இதனை சரி செய்தது என்று யாரும் சொல்லவில்லை. கட்சிக்காரர்களும் சொல்லவில்லை.

ஆனால், இன்று திட்ட வடிவமைப்பாளர் சொல்கிறார் எல்லாப் பிரச்சனையும் சரிசெய்யப்பட்டது என்று. எங்கு சரிசெய்யப்படும் என்றால், பேப்பரில் சரிசெய்யப்படும். நடைமுறையில் கிடையாது. அந்த நிலையில் இந்த கல்குவாரி அமைவதற்கு முதலில் அடிப்படை என்று சொல்லக்கூடிய வீடுகள், வீட்டுமனைகள் 300 மீட்டரில் இருக்கக் கூடாது. இதனை தமிழ்நாடு சிறு கனிம விதிகள் 1959 பிரிவு 36 புத்தகத்தில் பக்கம் 147 இருக்கிறது. கல்குவாரிகள் அமையக்கூடிய புலத்தை ஒட்டி 300 மீட்டரில் வீடுகள் அமையக்கூடாது. குடியிருப்புகள் இருக்கின்ற இடத்திலிருந்து 300 மீட்டரில் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது. ஆனால் இந்த மனோஜ் பிரபாகர் குவாரி புதியதாக ஆரம்பிக்கின்ற குவாரி இல்லை. பழைய குவாரியே. பழைய குவாரியிலேயே இப்படி விதிமீறல்களை கையாளுகிறார்கள். புதிய குவாரி இப்பொழுது தான் தொடங்குகிறார்கள். அங்கு குடியிருக்கின்ற இடம் என்று பார்க்கும்பொழுது, எல்லா இடமும் வசிக்கின்ற இடமா ? என்றால் இல்லை. அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், அதன் துணை விதிகள் ஒன்றிய நோக்கத்திற்காக என்று சொல்லி 3–வதாக குடியிருப்பு இடமெனில் வருவாய் ஆவணங்களில் Village Map, FMB, ஆ-பதிவேடு போன்ற ஆவணங்களில் சுட்டியாக குறிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுமட்டுமில்லாமல் ஊராட்சி மற்றும் DTCP Approval, Village Map – போடப்பட்டது 1976 – 1979 கால கட்டத்தில்தான். அதற்குப் பின்னர் பஞ்சாயத்து Approval, DTCP Approval வாங்கியிருந்த வீடுகள் இருந்தால், வீட்டு மனைகள் இருந்தாலோ போதும் குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று கூறிவிட்டார்கள். இப்பொழுது பலபேர் கதை சொல்கிறார்கள் அந்த வீடு ஏற்கனவே இருந்தது. அதை குவாரி உரிமையாளர்களே வாங்கி விட்டார்கள் என்றும், அந்த வீட்டை இடித்து விட்டார்கள் என்றும், அதனால் அது வீட்டுக் கணக்கில் சேராது.

வீட்டின் சொந்தக்காரர்கள் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று கடிதம் கொடுத்துவிட்டார்கள். எனவே அது கணக்கில் சேராது என்று சொல்வார்கள். எனவே எல்லாவற்றிற்கும் மேலே இருக்கக் கூடிய நிலஅளவை அலுவலகத்தில் சென்னையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் போட்டு 15 –ம் தேதி ஜீலை மாதம் பதில் கொடுத்திருக்கிறார்கள். என்ன என்றால் நத்தம் நில அளவை புல பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட வீடு தற்சமயம் சேதமடைந்திருக்கலாம்,அவை சேதமடைந்திருந்தாலும் அல்லது இடிந்து விட்டாலும் அந்த வீடு ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிக்கப்பட்டிருந்ததோ அவ்வாறே இருக்கும் என்று தெளிவாக கொடுத்திருக்கிறார்கள். வீடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் தான் நிலம் தொடர்பான பிரச்சனைகளில் அவர்தான் பொறுப்பு. விவசாய நிலத்தை வேறொரு பயன்பாட்டுக்கு கொண்டு போய்விட்டு மறுபடியும் விவசாய நிலமாக மாற்ற முடியாது என்று அவர்களுக்கும் தெரியும். ஐயா மெத்த படித்த மேதாவிகள் சொல்கிறீர்களே, இதற்கு ஏதாவது

சட்டத்தில் இடமிருக்கிறதா ? என்றால் கிடையாது. இவர்களாகவே பேப்பரில் எழுதிக் கொள்கிறது. அப்படி இருந்தால் இது செல்லாது. குவாரி அமையக்கூடிய புலத்திலிருந்து 300 மீட்டர் சுற்றளவிற்குள் வீடு இருக்கிறதா ? என்று பார்க்க நாங்கள் சென்று Village Map தேடினோம். பக்க எண்.216 –ல் Village Map –யை கொடுக்காமல் Topo sketch –ஐ கொடுத்திருக்கிறார்கள். நேற்று இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்தக்கூடிய இதே நிறுவனம் நேற்று மதியம் 3 மணிக்கு கோயம்புத்தூர் கிழக்குத் தெருவில் ஒரு கல்குவாரி கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தினார்கள் அதற்கு Village Map கொடுத்திருந்தார்கள். இதற்கு ஏன் கொடுக்கவில்லை Village Map இல்லையா ? ஏனெனில் Village Map இருந்தால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும். அதேபோல் பக்க எண்.215 –ல் கொடுத்திருக்கிறார்கள். கிராம நிர்வாக அலவலர் பராமரிக்கக்கூடிய Ladder உடன் கூடிய தொண்டி இருக்கும். அதில் Ladder என்றால் வீடு இருந்தால் வீடு இருக்கும், கிணறு இருந்தால் கிணறு இருக்கும். இப்படி ஒரு FMB –யை 686 –ல் சார்ந்துதான் யாரோ ஒருத்தர் கையெழுத்தை போட்டு கையில் கொடுத்து விட்டார்கள். இதில் என்ன பிரச்சனை இருக்கிறது என்றால், 686 என்ற புலத்தில் எத்தனை ஊர்கள் உள்ளது. ஒரு சகோதரி வந்து பேசினார்கள் 686–ல் என்ற புலத்தில் என்னுடைய வீடு உள்ளது என கூறினார். அந்த வீடு அங்கீகரிக்கப்பட்ட வீடா ? அங்கீகரிக்கப்படாத வீடா ? அங்கீகரிக்கப்பட்ட வீடு அதேபோல் மணியக்காரர்கிட்ட ஊராட்சி மன்றத்தினுடைய DTCP வாங்கிதான் அங்கீகரிக்கப்பட்ட வீடு. இவர்கள் கொடுத்த வரைபடத்தில் உங்கள் வீடு இல்லை. அதனால் இவர்கள் கணக்கு காட்டுவதில்லை. இது அங்கீகரிக்கப்படாத வீடு 362/2 லோகாம்பாள் அவர்களின் வீடு அங்கீகரிக்கப்படாத வீடு என்று இவர்கள் கொடுத்துள்ள ஆவணங்களில் காட்டியுள்ளார்கள். சட்டப்படி என்ன பண்ணமுடியாது ? குவாரியை எதிர்த்து பேசமுடியாது என்பது தான் உண்மை. மெத்த படித்த மேதாவிகள், டாக்டர் பட்டம் வாங்கியவர்கள்தான் இப்படிப்பட்ட ஆவணத்தை கொடுத்துள்ளார்கள். எங்களுக்குத் தெரிந்த விவரங்களில் சென்று கிராம வரைபடத்தை எடுத்தோம். இந்த கிராம வரைபடம் குப்பம் கிராமத்தின் பகுதி. 2 கிராம வரைபடத்தில் இது பாகம் இரண்டு. கிராம வரைபடத்தில் பார்த்தால் இந்த புலம் இருக்கக்கூடிய 686 புலத்தில் சகோதரி வீடு உள்ளது. லோகாம்பாள் அவர்களுடைய வீடு அரசாங்க ஆவணம் கிராம வரைபடத்தில் உள்ளது. அங்கே பஞ்சாயத்து அலுவலகம் சென்று பார்த்தால் இங்கு மணியக்காரர்கள் உள்ளார்கள் பஞ்சாயத்து அலுவலகத்தில் FMB-ல் இருக்கும். ஆனால் இவர்கள் அந்த ஆவணங்களை வைப்பது இல்லை.

ஆவணங்களை வைத்தால் எல்லோரும் தெரிந்துக் கொண்டு எல்லோரும் பேசுவோம். இந்த வீடு இடிந்த வீடு இல்லை, சேதமடைந்த வீடு இல்லை. இந்த வீட்டுக்காரர் வெளியூரில் இல்லை இந்த வீட்டுக்காரர் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லி கொடுக்கவில்லை. குவாரி அமைகின்ற புலத்திலிருந்து 100 மீட்டருக்குள் வீடு லோகாம்பாள் அவர்களின் வீடு உள்ளது. இது கிராம வரைபடம் என்ற Village Map–ல் உள்ளது, FMB–ல் உள்ளது அப்படி இருக்கும்போது இந்த குவாரிக்கு சட்டப்படி மெத்த படித்தவர்கள், பெரிய படிப்பு படித்தவர்கள் எல்லாம் வந்தார்கள் இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியுமா ? நன்றாக உள்ளது அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்கள். வீடு இருக்கும் இடத்தில் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியுமா ? முடியாது. இந்த புலத்தின் அருகில் நேர்கிழக்குப் பகுதியின் அருகில் புல எண் 682–ல் வீடு உள்ளது. விவாசாயி ஜெகநாதனை

கொலை செய்த அன்னை புளூ மெட்டல்ஸ் இன்னொரு பகுதி உள்ளது. கணினி புல வரைபடத்தில் உள்ளது, கிராம வரைபடத்தில் உள்ளது மற்றும் பஞ்சாயத்து அலுவலகத்தில இருக்கக்கூடிய கிராம வரைபடத்திலும் உள்ளது. வீடு இருந்தாலும், இடிந்து இருந்தாலும், வருவாய்துறை ஆவணங்களில் எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டதோ, அவ்வாறே இருக்குமென்று நிலஅளவு ஆணையம் பதில் கொடுத்துள்ளார்கள். இந்த குவாரிக்கு மட்டுமில்லை விவசாயி ஜெகநாதனை படுகொலை செய்த அன்னை புளூ மெட்டல்ஸ்க்கும் சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. இந்த Best Blue Metal என்று சொல்லக்கூடிய மனோஜ் பிரபாகர் அவர்களுடைய குவாரி அனுமதி கேட்ட புலத்திற்கு நேர்கிழக்குப் பகுதியில் இருக்கக்கூடிய புல எண். 687—ல் மூன்று கிணறுகள், ஒரு வீடு உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட வீடு உள்ளது.

அரசாங்கம் வருவாய்துறை அங்கீகரிக்கப்பட்ட வீடு உள்ளது. அதேபோல் தென்கிழக்குப் பகுதியில் மூன்று வீடுகள் புலஎண் 690 அந்த வீட்டிற்கு உரிமையாளர் பெயர் குணசேகரன், செல்வகுமார் மற்றும் தங்கம்மாள் இந்த மூன்று வீடுகளும் அங்கீகரிக்கப்பட்ட வீடு. இந்த மூன்று வீடுகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வீடு, ஒரு வீடு இருந்தாலும் அனுமதி கொடுக்க முடியாது. ஆனால் மூன்று வீடு உள்ளது அதுவும் 150 மீட்டரில் உள்ளது. 690—ல் மூன்று வீடுகள் உள்ளது என கிராம வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. 682/2, 687, 690 என்று கிராம வரைபடத்தில் 6 அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளது சட்டப்படி அனுமதி தரமுடியாது. அனுமதி தரக்கூடாது இது Google வரைபடம் இந்த குவாரியினுடைய வெளிமுனைப் பகுதியில் இருந்து அட்சரேகை, தீர்க்கரேகை என்று அதிலிருந்து 300 மீட்டருக்குள் எத்தனை வீடுகள் உள்ளது என்று பார்த்தால் 181 மீட்டரில் ஒரு வீடு உள்ளது. குவாரியின் வடக்குப் பகுதியில் 237—வது மீட்டரில் ஒரு வீடு உள்ளது. அதேபோல் குவாரியினுடைய வடமேற்கு பகுதியில் 231 மீட்டரில் 2 வீடுகள் உள்ளது. வடக்குப் பகுதியில் 281—ல் ஒரு வீடு உள்ளது. குவாரியின் வடமேற்குப் பகுதியில் 220 மீட்டரில் 2 வீடு உள்ளது. குவாரியினுடைய வடக்குப் பகுதியில் 51 மீட்டரில் ஒரு வீடு உள்ளது. இவை அனைத்தும் சட்டப்படி சிறுகனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36, 1, 1A, சட்டப்படி அனுமதி கொடுக்கக்கூடாது. குவாரியின் வெளிமுனைப் பகுதி 300 மீட்டர் தூரத்தில் தொழிலாளர்களுடைய குடியிருப்பு நிரந்தர அல்லது தற்காலிகமாக எந்த குடியிருப்பும் இருக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். மே 1—ந்தேதி அன்று விருதுநகர் மாவட்டத்தில் ஆரூர் என்ற இடத்தில் 1 வெடி விபத்து நடந்தது. இந்த வெடி விபத்து நடந்ததினால் சுற்றியும் 3 கிலோ மீட்டர் முழுக்க வெடி விபத்து நடந்தது நாங்கள் சென்றோம். மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திரு.ஜெயசந்திரன் அவர்கள் புகார் கொடுத்ததின் அடிப்படையில் 5 குவாரிகளை மூடினார்கள். எங்களின் கோரிக்கைகளை ஏற்று 5 குவாரிகளை மூடினார்கள்.

3 கிலோ மீட்டர் சுற்றளவில் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் பாதிக்கப்பட்டது. 300 மீட்டருக்குள் யாரும் குடியிருக்கக்கூடாது என கூறுகிறார்கள். மே 14—ந் தேதி பார்த்தீர்கள் என்றால் திருவண்ணாமலை மாவட்டம் எடமங்களம் என்ற ஊரில் கல்குவாரி வெடி வெடித்து, பக்கத்து தோட்டத்தில் நடவுசெய்து கொண்டிருந்த விவசாயி தலைமேல் கல் விழுந்ததினால் விவசாயி அதே இடத்தில் இறந்துவிட்டார். இப்படியான நிலை வந்துவிடும் என்பதற்காக தற்காலிக, நிரந்தர குடியிருப்பு இருக்கக்கூடாது என்கிறார்கள். இந்த மனோஜ் பிரபாகர் குவாரி சட்டப்படி அமைக்க முடியாது. அப்படி

சேர்ந்து அமைக்கும்படியானால் பல்வேறு கட்சிக்காரர்கள் சட்டப்படி மக்களுடன் சேர்ந்து போராடுவார்கள் என்று நம்புகிறோம். ஆவணங்கள் சட்டப்படியான கிராம வரைபடத்தில் உள்ளது. FMB 682 என்று சொல்லி கிராம வரைபடத்தில் உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்று உள்ளது.

சகோதரி கூறியது போல் அங்கீகரிக்கப்பட்ட வீடு என்று கூறி கிராம வரைபடத்தில் உள்ளது. ஆனால் ஆவணங்களில் இல்லை, இது கணினி வரைபடம் 686–ல் இல்லை, எங்குள்ளது ஐயா ? இப்படி மோசடி செய்தால் எப்படி ஐயா ? நாங்கள் என்ன செய்வது ? அதிகாரிகளை சரி செய்ய வேண்டும் ஐயா, உங்களுடைய அதிகாரிகளே இப்படி ஆவணங்களை மறைத்துக் கொடுத்தால் நாங்கள் என்ன செய்வது ? அதிகாரிகளை சரி செய்ய வேண்டும் ஐயா. படிச்சவன் சூது வாது பண்ணினால் போறவன் போனா அய்யோன்ன போவான். ஆனால் அவர்கள் அய்யோன்னு போகவில்லை, வயநாட்டில் எல்லோரும் அய்யோ என்று போய்விட்டார்கள். இப்படி இந்தப் பகுதியும் போகக்கூடாது என்று தொடர்ச்சியாக கூறுகிறேன். நீங்கள் ஒருத்தராவது நடவடிக்கை எடுங்கள். பிச்சம்பட்டி கிராமத்தில் ஊர் நத்தத்தையே இல்லாமல் செய்தார்கள். நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை உங்களிடம் புகாராகவே கொடுத்தோம். இங்கேயும் இப்படித்தான் செய்துள்ளார்கள் யாராவது ஒரு அதிகாரி நடவடிக்கை எடுங்கள். இப்போ திருப்பூர் ஆட்சியரிடம் கூறி காங்கேயம் குட்டப்பாளையம் கிராமத்தில் ஒரு வாக்குமூலம் எழுதிக்கொடுத்தார் என்னவென்றால் நான் TNPSC தேர்வு எழுதி கிராம நிர்வாக அலுவலராக வந்துள்ளேன். நான் குவாரியின் வெளிமுனை பகுதியிலிருந்து அளந்து அளிப்பதற்கு பதில் தடுப்புவேலை முடிந்து அடுத்து அறிக்கை அளித்துள்ளேன். இது என் அறியாமையின் காரணமாக செய்துவிட்டேன். இதுபோல் இனி தவறுகள் செய்ய மாட்டேன் என்று கொடுத்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டார் நீங்கள் கூறினால் நான் அவர்மேல் நடவடிக்கை எடுக்கிறேன் என்று கேட்டார். நான் விட்டுவிடுங்கள் ஐயா, இனிமேல் அனைத்து கிராம நிர்வாக அலுவலரிடம் இதுபோல் இருக்கட்டும் என்று கூறினேன். இந்த குப்பம் கிராமத்தில் இது 30–வது கூட்டமாக இருக்கும்.

ஒவ்வொரு கூட்டத்திலும் இதை சொல்லி வருகிறோம். திரும்ப திரும்ப இதையேதான் கூறுகிறார்கள் இது கணினியில் தரவிறக்கம் செய்தது. ஒரே கருத்து பிச்சம்பட்டியில் 20 நாட்களுக்கு முன்பு எடுத்த கணினி FMB-ல் வீடு இருக்கிறது. அந்த வீட்டில் இந்த சகோதரி குடியிருந்தார்கள் அப்பொழுது அந்த வீடு இதில் இல்லை இதை யார் மறைத்தார்கள். நான் சுரண்டி எடுக்கவில்லை ஐயா, குறிப்பு இருக்கிறது FMB–ல் இருக்கின்றது. அந்த FMB–யை ஆவணத்தில் வைப்பதில்லை. ஆவணத்தில் இருந்து அதிகாரி கையெழுத்து இருக்கா ? என்று பார்ப்பார்கள் அப்பொழுது ஆவணத்தை மறைத்து கொடுத்தால் அது எவ்வளவு பெரிய மோசடி கணக்குப்படி அங்கு வீடு இல்லை ஐயா.

கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த ஆவணத்தில் அறிக்கை கிடையாது, தாசில்தார் அறிக்கை கிடையாது, AD பார்த்த அறிக்கையும் கிடையாது. மொத்தத்தில் எதிலும் இல்லை ஆனால் காலையில் நாங்கள் சென்று பார்த்தால் வீடு உள்ளது. இவர்களுக்கெல்லாம் தெரியாத கண்ணாடி எவர்களிடம் உள்ளது இது எப்படி என்று தெரியவில்லை. ஐயா நான் இப்பொழுது என்ன கூறுகிறேன் என்றால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வீடு இருந்தாலும் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது சட்டப்படி அவர்களது வீடு அங்கீகரிக்கப்பட்ட வீடு. அப்படி அங்கீகரிக்கப்பட்ட வீட்டை நீங்க எந்த ஆவணத்திலும்

காட்டவில்லை. ஏற்கனவே நீங்கள் கொடுத்த கிராம வரைபடம் இருந்த வீடு இப்பொழுது இல்லை. தவறு செய்யும் அதிகாரிக்கு என்ன பிரச்சனை? சகோதரி நீங்கள் கூறுங்கள் அதிகாரி நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறுகிறார்கள். கட்டாயம் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புவோம். தவறான அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பார் என்பதை இந்த கூட்ட ஆவணத்தை வைத்தே நாம் பேசுவோம் ஐயா. தெளிவாக கூறுகிறேன் கிராம வரைபடத்தில் உள்ள வீடு கிராம நிர்வாக அலுவலர் உள்ள புல வரைபடத்தில் இருக்கக்கூடிய வீடு இங்கு காட்டப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது. புல.எண் 686–ல் உள்ள வீடு மட்டுமில்லாமல் 687–ல் ஒன்றும் 690–ல் மூன்றும் 689–ல் ஒரு வீடும் உள்ளது. இப்படி 6 வீடுகளை காட்டவில்லை ஒவ்வொரு முறையும் நாங்கள் கரடியாக கத்துகிறோம். நீங்கள் அதிகாரிகள் வயநாடு போன்று ஏதாவது நடந்தால் தான் பார்க்கிறீர்கள். ஏற்கனவே இங்கு 3.5 ரிக்டர் அளவு நில அதிர்வு. தமிழ்நாட்டில் இந்த வருடம் இங்குதான் 116 டிகிரி வெயில் அடிக்கின்றது. ஆனால் கணக்கு காட்டியது 112 டிகிரி என்ற கூறி உண்மையை மறைத்துவிட்டார்கள். தமிழ்நாட்டில் அதிக வெப்பநிலை அதனால் பள்ளிக்கூடம் இல்லை. இவ்வளவு பாதிப்பு உள்ள இடத்தில் இருந்து பேசுகிறேன் ஐயா. என் வீட்டு அக்கறைக்கு பேசவில்லை. நீங்கள் எல்லாம் செய்ய வேண்டிய கடமை. இந்த பகுதி அழிந்து போய்விடக்கூடாது என்று கவலையோடு பேசுகிறேன் ஐயா, ஆவணத்தை தொடர்ந்து மறைக்கிறார்கள். நீங்களே இந்த மாவட்டத்தில் 10, 15 கூட்டத்திற்கு வந்து கொண்டிருக்கும் ஒரு அதிகாரி மீது நடவடிக்கை எடுத்து இருந்தால் அடுத்த அதிகாரி தவறு செய்வார்களா ? என்று வினவினார்.

அடுத்த திட்ட வடிவமைப்பில் தவறு செய்வார்களா ? ஆவணத்தை மறைத்துக் கொடுத்தால் திட்ட வடிவமைப்பாளர் மீது Black List செய்யுங்கள் இப்படி தவறான ஆவணத்தை கொடுக்கிறார்கள் கருப்பு பட்டியலில் சேருங்கள். நாங்கள் கேட்பது இதை மட்டும் தான். 2021–ல் இருந்து ஒரு 100 கூட்டம் நடந்துள்ளது. அனைத்துக் கூட்டத்தையும் இதை பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கரூர் மாவட்டத்தில் மட்டும் சிறிது கூட நகருவதில்லை என்ன காரணம் என்ற தெரியவில்லை ? மற்ற அனைத்து மாவட்டத்திலும் நடக்கிறது நீங்கள் புகார் கேட்கிறீர்கள் ஒவ்வொரு கூட்டத்திலேயும் ஒரு 30 புகாராவது கொடுத்துள்ளோம். அனைத்து துறைகளிலும் புகார் கொடுத்துள்ளோம் எந்த துறையும் நடவடிக்கை எடுக்கவில்லை. எங்கெங்கு புகார் கொடுத்துள்ளோம் என்பதை பட்டியலாக கொடுக்கிறோம் தயவுசெய்து அதிகாரிகள் சட்டப்படி நடக்கவில்லை என்றால் உயர் அதிகாரிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் தவறுகளை நீங்கள் பாதுகாத்தீர்கள் என்றால் வயநாடுபோல் குப்பம் அழிந்துவிடும். தமிழ்நாட்டில் 6 இடமும், இந்தியாவில் 147 இடத்தில் நிலச்சரிவு வரும் அபாயம் உள்ளது. அதில் நம் குப்பம் பகுதியும் ஒன்று. அதுபோல் நீங்கள் வாழ்ந்த காலத்தில் ஊர் வாழ்ந்தது என்றுதான் கூறவேண்டுமே தவிர ஊர் அழிந்தது என்று கூறக்கூடாது. அதுபோல் 45 வகையான ஆவணங்கள் சமர்பிக்கப்படவில்லை 10 வகையான ஆவணங்கள்தான் உள்ளது. பெயரைச் சொன்னால் அதிக பேர் ஆகிவிடும் என்பதால் இந்த கருத்தை ஒவ்வொரு கூட்டத்திலும் தொடர்ச்சியாக கூறி வருகிறோம். நீங்கள் SEIAA, TNPCB இணையத்தில் முடுக்கும்பொழுது எல்லா வகையான ஆவணங்களையும் இணைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் மூலம் இந்த கருத்தைக் கூற வேண்டும். ஏற்கனவே, ஜெயலட்சுமி அம்மா இந்த கருத்தை எழுதியுள்ளார்கள். நாங்கள் சென்று உறுப்பினர் செயலர் மற்றும் தலைவர் ஆகியோர்களைப் பார்த்தோம். இங்குள்ள அதிகாரிகள் சென்று கூற வேண்டும். எங்கள்

அக்கறைக்கு கூறவில்லை. இப்படி அனைத்து தரப்பட்ட ஆவணங்கள் கிராம வரைபடம் மற்றும் FMB போன்றவற்றில் இணைக்குமாறு கூறுங்கள். அடுத்தப்படியாக, பசுமை அரண் இங்கு நாங்கள் அதை செய்கிறோம், இதை செய்கிறோம் என்று கூறுகிறார்கள். அப்படி எதுவும் இங்கே இல்லை, பசுமை அரணும் இல்லை. ஏக்கருக்கு 200 மரம், இங்கு 1042 ஏக்கர் 2200 மரம் வைக்கப்படும் என்று கூறினார்கள். அப்படி நட்டிருந்தால் மரத்தை சென்று பார்த்தால் காற்று அடித்தால் ஒடியும் அளவிற்கு உள்ளது. மைனிங் பிளானில் கொடுத்துள்ளது நாட்டு மரங்கள் ஆல், அத்தி, பூவரசு, வேம்பு போன்ற நாட்டு மரங்கள் வைப்போம் என்று இருக்கிறது.

ஆனால் நடைமுறையில் பார்த்தால் காற்றடித்தால் சாய்கின்ற மரங்களை வைத்துள்ளார்கள் இந்த பேப்பர்களில் உள்ள நடைமுறைகள் இங்கே இல்லை அதை சரிசெய்ய கூறுங்கள். அதேபோல், இங்கு இயங்கிக் கொண்டுள்ள அனைத்துக் குவாரிகளிலும் நடைமுறைபடுத்தச் சொல்லுங்கள். அதுபோல் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு, நலம் தொழிலாளர்கள் வர்க்கத்திற்காகத்தான் பேசுகிறோம் என்று கூறுகிறார்கள். எந்த ஒரு கல் குவாரியாவது தொழிலாளர்களுக்கு PF-ல் நாங்களும் பணம் போடுகிறோம் அவர்களும் பணம் போடுகிறார்கள் அவர்களுக்கு ஏதாவது உதவியாக இருக்கும். மேலும் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் போடுகிறோம், ESI மருத்துவ வசதி செய்துள்ளோம் என்று கூறுகிறார்களா ? ஒரு தொழிலாளர்களுக்கு கூட கிடையாது. அனைத்தும் தினக்கூலி தான் செத்துப்போய் கணக்கில் வந்தால் ஏதோ செலவுக்கு கொடுப்பார்கள் கணக்கில் வரவில்லை என்றால் காலி எதுவும் இல்லை. இப்பொழுது NTC யில் கல்விழுந்து ஒருவர் இறந்துவிட்டார். அதற்கு தமிழ்நாடு அரசு சார்பில் 15 இலட்சம் குவாரி உரிமையாளர் 10 இலட்சம் என்று நாங்கள் அனைவரும் போராடி அன்று இருந்த ஆட்சியர் கொடுத்து தொலையுங்கள் என்ற வகையில் கொடுத்து வைத்தார்கள். 24 இலட்சம் NTC இறந்து போனதற்கு மட்டும்தான் கிடைத்துள்ளது. மேலும் எந்தக் குவாரியில் செத்துப்போனாலும் அவர்களுக்கு 1 இலட்சம் அல்லது 2 இலட்சம் கொடுத்தார்கள் அல்லது கணக்கில் வராமல் போய்உள்ளது. சட்டப்படி செய்ய வேண்டியதை செய்யச் சொல்லுங்கள். இந்த நிறுவனம் இதுபோல் எங்கேயும் செய்யவில்லை.

சட்டப்படி அதை சொல்லுங்கள் இதை பல இடங்களில் செய்கிறார்கள். இங்கே எங்கேயும் செய்யவில்லை. ஆனால் இவர்கள் தொழிலாளர் நலனுக்காக செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இது எப்படி இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்று எங்களுக்கு தெரியவில்லை. குவாரிகளில் எல்லாம் கம்பிவேலி போட வேண்டும் என்று போன ஆண்டே அரசு செயலாளர் திரு.சிவதாஸ் மீனா சொல்லி எல்லா கிராம நிர்வாக அலுவலர்களையும் கணக்கில் எடுத்து எட்டாவது மாதத்திற்குள் பட்டியல் கொடுத்து ஒன்பதாவது மாதத்திற்குள் இயங்கிக் கொண்டுள்ள, இயங்கி மூடப்பட்ட குவாரிகள் அனைத்தும் கம்பிவேலி போடப்படும் என்று கூறினார்கள். இதை செய்யச் சொல்லி சரியாக ஒரு வருடம் ஆகிவிட்டது. இன்றைக்கு குப்பத்தில் இருக்கக்கூடிய 80 சதவீதம் குவாரிகள் கம்பிவேலி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்துங்கள். போனவருடம் மட்டும் 500 பேர் இறந்துவிட்டார்கள். உங்கள் தலைமை செயலாளர் ஏன் இப்படி கொண்டு வந்திருக்கிறார். 500 பேர் இறந்திருக்கிறார்கள் என்று புகார் கொடுத்தும் இப்படி செய்திருக்கிறார்கள். ஆனால் இப்போது

நடைமுறையில் இல்லாமல் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துங்கள். ஒரு குவாரி இயங்கி முடிந்திருந்தால் குவாரி இயங்கி முடிக்கும்பொழுது சிறு கனிம சலுகைவிதியில் பக்கம் எண்.99–ல் 9(F)–ல் என்ன சொல்கிறார்கள் என்றால், குத்தகை காலம் முடிந்த பின்னால் குவாரிப் பகுதியில் எந்த குத்தகைதாரரும் கனிமம் வெட்டுவதை தொடங்கக்கூடாது. மேற்காணும் நிபந்தனைகளை பின்பற்றாமல் (அல்லது) மீறினால் ஏதாவது கனிமம் வெட்டுதல் (அல்லது) கனிமம் கொண்டு செல்லுதல் மற்றும் கனிமம் வெட்டுதல் சட்ட விரோத கனிமம் கொண்டு செல்லுதல் சட்ட விரோத செயல் என்று கருதப்படும் மற்றும் இவ்விதியின் அடிப்படையில் சட்டத்தின் அடிப்படையில் அந்த நபரின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எந்தக் குவாரியும் நடந்து முடிந்தால் அன்று மாலையே பூட்டுப்போட்டு பூட்டி விடவேண்டும் என்று சிறு கனிம சலுகை விதியில் இருக்கிறது. ஆனால் எந்தக் குவாரியிலும் அப்படி இல்லை. வரும்பொழுது பார்த்தோம் தி/ள். பெஸ்டு ப்ளூ மெட்டல்ஸ் நிறுவனத்தை சுற்றிலும் 8 குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. புறம்போக்கு நிலத்திலும் அரசாங்க பாறையையும் ஜெகநாதனை கொலைசெய்த பாவிகள் அரசாங்க பாறையையும் வெட்டி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் அனைத்து குவாரிகளும் இயங்கி கொண்டிருக்கின்றது. காலையில் பார்த்துவிட்டு தான் வந்தோம். என்ன சார் நடக்கிறது இங்கே ? என்று வினவினார். இப்படி இருக்கிறது சட்டம். நாங்கள் ஹெல்மெட் போடவில்லையென்றால் எங்களுக்கு 1,000/–ரூபார்ப அபராதம், குடித்துவிட்டு வண்டி ஓட்டினால் 10,000/– ரூபாய் அபராதம் என்று எல்லோருக்கும் தெரியும். இவையெல்லாம் எங்கள் உயிரை பாதுகாக்க வேண்டும் என்று தெரியும். சமூகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை உங்களுக்கு இருக்கிறதா ? இல்லையா ? என்று வினவினார். நாங்கள் புகார் கொடுத்தால் கிராம நிர்வாக அலுவலர் எங்களுக்கு போன் செய்கிறார்கள் நீங்கள் முகிலன், சண்முகம் பேச்சை கேட்டுவிட்டு எதுக்கு புகார் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

நாங்கள் குவாரிகாரர்களிடம் பேசிக்கொள்கிறோம் என்று கிராம நிர்வாக அலுவலர் கூறுகிறார்கள் என்ன ஐயா இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் ஒருவர் மீதாவது உரிய நடடிவக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமில்லாமல் இன்னும் 2 செய்திகள் இருக்கின்றது. கிராம நிர்வாக அலுவலர் கூறியது வெடி வைக்கின்றபொழுது மதியம் 1 முதல் 2 மணிவரை மட்டும்தான். இந்த பகுதியில் பெஸ்ட் புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தில் எங்கேயாவது மதியம் 1 முதல் 2 மணிவரை வெடிவைத்து பார்த்திருக்கிறீர்களா ? குவாரி இயங்குகின்ற நேரம் 7 முதல் 5 மணி வரை ஏற்கனவே இந்த நிறுவனக் குவாரி முறையாக நடைபெறவில்லை. அப்படி இருக்க இந்தக் குவாரி மட்டும் எப்படி முறையாக இருக்கும். அனைத்தும் பெயரளவில் உள்ளது. ஆதரவாக பேசுகின்ற நண்பர்கள் நாங்கள் இப்படி செய்கிறோம் என்று சொல்லட்டும். இந்த நிறுவனம் இப்படித்தான் முறையாக இயங்குகிறது. நாங்கள் தினமும் இதே ஊரில் தான் பக்கத்து ஊரில்தான் இருக்கிறோம் கண்காணித்துக் கொண்டுதான் உள்ளோம் என்று. எதுவும் கிடையாது அனைத்தும் தவறு. இப்படியான முறைகளில் வெடி வைப்பது நிகழ்வு நடக்கிறது. அது மட்டுமல்லாமல் வெடி எப்படி வெடிப்பார்கள் என்றால் நாணல் வெடி, சீரியல் பிளாஸ்டு என்று. சீரியல் பிளாஸ்ட் என்றால் துப்பாக்கியில் போட்டு கொல்லு பட்டாசு வெடி வைப்போம் டுப், டுப், டுப் என்று 20 நொடிக்கு ஒருமுறை வெடிவெடிக்கும் பெரிய அதிர்வு இல்லாமல் வெடிக்குமாம் அப்படி என்று பேப்பரில் இருக்கின்றது. பேப்பரில் உள்ளபடி வெடி வைப்பது உண்மையான அடிப்படையில்

அதை நடைமுறைப்படுத்துமாய் கேட்டுக்கொள்கிறோம். பஞ்சாயத்துக்கு வருமானம் வரும் என்று திட்ட வடிவமைப்பாளர் கூறினார். இங்கே இருக்கக்கூடிய சாலைகள் கிராமப்புற சாலைகள் 40 இலட்சம் முதல் 1 கோடி வரை போடுகிறார்கள். தேசிய மாநில நெடுஞ்சாலைகள் 1 கோடி முதல் 250 கோடி வரை போடுகிறார்கள். நாங்கள் ஒன்று கொண்டு வந்துள்ளோம் ஆணையராக இருக்கும் போது எவ்வளவு நிதி இதுதான் நிதி பார்த்துக் கொள்ளுங்கள். 6 டயர் வண்டி உடையது 18டன், 10 டயர் வண்டி 28 டன், 12 டயர் வண்டி 35 டன், 16 டயர் வண்டி 48 டன் இதில்தான் எடையோடு செல்ல வேண்டும். அதுவும் குறிப்பாக கிராம சாலைகளில் 10 டன்னுக்கு மேல் செல்லக்கூடாது. 10 டன் அளவுக்கு தான் வாகன எடையோடு செல்லவேண்டும். இங்கே ஒரு வண்டியாவது இப்படி செல்வதை பார்த்திருக்கிறீர்களா? என்ன அபராதம் போட்டிருக்கிறீர்கள் போடவில்லை.

போக்குவரத்து துறையில் அதிகமாக எடுத்தால், அதிகமாக கொண்டு சென்றால் அந்த வண்டியை என்னென்ன பிரிவில் போக்குவரத்து காவல்துறை, வருவாய்துறை, வட்டார போக்குவரத்து அலுவலர் பிரிவு 113, 113(3), 114,194 மோட்டார் வாகன சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டோம். இந்த மாவட்டத்தில் ஒரு வண்டிக்குக்கூட அபராதம் விதிக்கவில்லை என்று கூறினார்கள். பொதுசொத்துக்கு சேதாரம் Non Paylable Section அதில் கொண்டு சென்றால் 1 டன் ரூ.20,000, 10 டயர், 6 டயர் வண்டி, 18 லோடு தான் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் அதில் 19 டன் ஆக கொண்டு சென்றால் முதல் டன்னுக்கு ரூ.20,000/–. அடுத்தடுத்து டன்னுக்கு 2,000 ரூபாய் அவர்கள் அபராதம் விதிக்க வேண்டும். லோடு கொண்டு செல்லக்கூடாது. லோடை இறக்கிவிட்டு வேறு வண்டியில் தான் கொண்டு செல்லவேண்டும் இதில் வண்டி உரிமம், டிரைவர் உரிமம் இவை அனைத்தும் உள்ளே இருக்கிறது. இவையெல்லாம் பேப்பரில் இருப்பது, நடைமுறையில் இதை செயல்படுத்தவேண்டும். தயவுசெய்து செய்யுங்கள் நீங்களே செய்ய முடியாது என்றால் நாங்கள் கூறுகிறோம். நாங்கள் உங்களுக்கு விதிகளோடு கொடுக்கின்றோம் நீங்கள் சட்டப்படி அதை செய்ய வேண்டும். தயவு செய்து செய்யுங்கள்.

கரூர் மாவட்டத்தை நீங்கள் இருந்த காலத்தில் அழிப்பதற்கு துணை போய்விட்டோம் என்று பெயர் வாங்காதீர்கள். ஏற்கனவே இந்த 362–ல் NTC குவாரி 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 அடியில் அனுமதியில்லாமல் வெட்டி கொண்டிருக்கிறார்கள். தடுக்க நாங்கள் போராடி கொண்டிருக்கிறோம். இந்த நாட்டை யார் ஆள்வது? NTC காரர் ஆளுகிறாரா? எனவே இந்த அடிப்படையில் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டப்படி பெஸ்ட் புளூ மெட்டல்ஸ் என்று கூறக்கூடிய மனோஜ் பிரபாகர் கல்குவாரி புலஎண்.383 மற்றும் 386 பகுதிக்குள் கல்குவாரி அமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், சுற்றிலும் டவர்லைன் இருக்கிறது. இப்படி பல்வேறான தற்காலிக குடியிருப்பு இருக்கிறது. பல்வேறு விதமான தீமைகள் இருப்பதால் இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்கக் கூடாது. நாங்கள் SEIAA–க்கு சென்று ஏக்கருக்கு 10 இலட்சம் கொடுத்தோம் என்று கூறி கல்குவாரிக்கு பேட்டி கொடுக்கிறார்கள். அப்படியே வாங்கிக் கொண்டு வந்தாலும் நாங்கள் SEIAA–வையும் பார்த்தோம், உறுப்பினர் செயலரையும் பார்த்தோம் என்று கூறுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் 4 கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். திருப்பூர், நாமக்கல், ஈரோடு மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சியருக்கு நடவடிக்கை

எடுக்க கடிதம் எழுதியிருக்கிறார் எனவே அதை செய்யுங்கள். உங்களுக்கு நாங்கள் எல்லாவற்றையும் கொடுக்கிறோம் நீங்கள் வேலை செய்வதற்கு என்னென்ன ஆவணங்கள் வேண்டுமோ அனைத்தையும் கொடுக்கிறோம். யாரோ கூறுகிறார்கள், எவனோ கொள்ளையடித்துக் கொடுக்கிறார்கள் என்று செய்தால் இங்கு யாரெல்லாம் துணையாக பேசுகிறார்களா? வருங்கால அழிவு அவர்கள் இந்த பாரதத்தில் கண்முன்னால் காட்டும் இந்தக் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்கக்கூடாது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.